# மொழி, கல்வி, கலை மற்றும் பண்பாடு



கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும் பழமையிலும் பொய்மையிலும், பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்களது மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும் மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப – வரலாற்று ஓட்டத்திற்கு அமைய கலை இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான, புரட்சிகரமான படைப்புக்களைச் சிருஷ்டிக்க வேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அமைய வேண்டும் சமூகப் புரட்சிக்கு வித்திடுவதாக அமைய வேண்டும்.

போரும் - கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும், அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்கமுடியாது.

விடுதலைப் போராட்டத்திலிருந்து கலைஞர்களும் - அறிஞர்களும் அந்நியப்படுவது, மக்களிலிருந்தும் வாழ்க்கையின் நிதர்சனத்தில் இருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.

எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்க வேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினை, சிருஸ்டிகர்த்தாக்கள் சித்தரித்துக்காட்ட வேண்டும்.

மொழியும் கலையும் கலாசாரமும் வளம்பெற்று, வளர்ச்சியும் - உயர்ச்சியும் அடையும் பொழுதே தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கம் பெறுகின்றது (பலம் பெறுகின்றது). மனித வாழ்வும் சமூக உறவுகளும் மேன்மை பெறுகின்றன தேசிய நாகரிகம் உன்னதம் பெறுகின்றது.

எமது விடுதலைப் போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பதுபோல, கல்வியும் எமது போராட்டத்திற்குக் காப்பரணாக நிற்க வேண்டும்.

மொழி, கலை, கலாசாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன. ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாகின்றன.

பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாசாரம், பண்பாடு எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும், எமது மக்களின் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும்.

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப் பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றன.

**கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்.**



நான் கலை இலக்கியங்களை மதிப்பவன் கலை இலக்கியப் படைப்பாளிகளை கௌரவிப்பவன், கலை கலைக்காக அல்லாமல் மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன்.

மக்களிடையே விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும், விடுதலை உணர்வையும் தூண்டிவிடும் கலை இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும் இத்தகைய கலை - இலக்கியப் படைப்புக்களே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உரமூட்டுவதாக அமையும்.

நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருந்தால்தான், கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச்செல்ல முடியும்.

இளமையிலிருந்துதான் ஒருவனை முழுமையாக வளர்க்க முடியும். முழுமை எனும் பொழுது அறிவும், ஆற்றலும், அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றேன்.

எமது மொழியும் - கலையும் - பண்பாடும் எமது நீண்ட வரலாற்றில், விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக நிற்பவை.

சமூகப் புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கக்கூடியதாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே எனது கருத்து.

**கலாசாரம்** உயர்நிலை எய்தும் பொழுதே
**ஒரு இனம்** மகிமை
பெறுகின்றது
மனிதவாழ்வு உன்னதம் பெறுகின்றது.
**மனிதம்**
வளர்ச்சி பெறுகின்றது.

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகின்றது. அந்தக்காலத்தையும் அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும் விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்திரிக்கும் கலை - இலக்கியங்கள் உன்னதமானவை.




தான் பிறந்த மண், தான் வாழ்ந்த சூழல், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது படைப்புத்தளமாக அமைகின்றது வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப்பொருளாக எடுத்து கலைப் பொருள் படைப்பவனே சிறந்த கலைஞன்.

Tamileelam Archive

கலாசாரம் என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனங்கண்டு களைதல் அவசியம்.

கலாசாரம் உயர்நிலை பெறுவதாயின், கலாசார மறுமலர்ச்சி அவசியம் கலாசாரப்புரட்சி அவசியம்.

கல்வி எனும் மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து, தமிழீழத்தின் கல்வி த்துறையைச் சிதைத்துவிட, சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகின்றது.

சான்றோரைப்
**போற்றுவதும் கற்றோரைக் கௌரவிப்பதும்**
தமிழர்களாகிய எமது மரபு
எமது **சீரிய பண்பாடு.**

எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடித்தளமானது. நீண்ட காலமா கவே, எமது கல்விவாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான் இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அறிவின் அதி உயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை. தன்னலமும் தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும் இலக்குகளையும் மாணவ சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந் துணர்வை வளர்த்து, மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டும்.

கலைத்துறையில் சர்வாதிகாரம் இருக்கக்கூடாது அப்படி இருந்தால் அது வளராது.

**கல்வியும்**
**மொழியும்**
**பண்பாடும்**
**நிலமும்**
**எமது இனக்கட்டமைப்பை**
**தாங்கி நிற்கும் தூண்கள்.**
**இந்தத் தூண்களைத்**
**தகர்த்துவிட எதிரி முனைகிறான்.**
**இனத்தனித்துவத்தை**
**அழிப்பது அவனது**
**நோக்கம்.**



Tamileelam Archive